# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF PRINCIPAL SPECIAL COURT FOR EC & NDPS ACT CASES, MADURAI.

| | | | |
|---|---|---|---|
| CASE NO | C.C.45/2016 | | |
| PROSECUTION WITNESS | P.W.1 | | |
| DATE | 21-10-2024 | | |
| NAME | Tr.Balasubramanian | CASTE | |
| FATHER'S NAME | | CALLING | |
| VILLAGE | | RELIGION | |
| TALUK | | AGE | |

**முதல் விசாரணை**

எனது பெயர் பாலசுப்பிரமணியன், நான் இந்த வழக்கிற்கு பின்னிட்டு 2016ம் வருடம் முஸ்லிம் மதத்திற்கு மாறி எஸ். முகமது ஹாரிஸ் என்று பெயரை மாற்றிக்கொண்டேன். நான் மதுரை மாநகர், ஜெயந்திபுரம், பாரதிரோடு, கதவு எண்.380 என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நானும், மதுரை பைபாஸ்ரோடு, பாரதிதாசன் தெருவில் குடியிருக்கும் ஜெகநாதன் என்பவரும் சிறுவயது முதல் நண்பர்கள். அவரும், நானும் மதுரை பெரியார் பஸ் நிலையம் அருகில் உள்ள கூடலழகர் பெருமாள் கோவில் அருகில் உள்ள மேல வடம்போக்கி தெருவில் கதவு எண்.28ல் மாடர்ன் டிஜிட்டல் மீடியா லிமிடெட் என்ற பெயரில் 2008ம் வருடம் முதல் நிறுவனம் நடத்தி வந்தோம். அதற்கு முன் 22 ஆண்டுகளாக டிஜிட்டல் வார் என்ற நிறுவனத்தை மதுரை பாண்டிய வேளாளர் தெருவில் நாங்கள் இருவரும் கேசட் வியாபாரம் செய்து வந்தோம். கடந்த 39 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் சுற்றுப்புறத்தில் இருந்த நாட்டுப்புறபாடல்களை தொகுத்து கேசட்டுகளாக ராம்ஜி கேசட் என்ற பெயரில கேசட்டுகள் வெளியிட்டு விற்பனை செய்து வந்தோம். கடந்த 06.07.2013ம் தேதி மாடர்ன் டிஜிட்டல் மீடியா லிமிடெட் என்ற பெயரில் காப்பி ரைட் உரிமையுள்ள தயாரிப்பாளர்களிடம் உரிமை பெற்று DVD கேசட்டுகள் விற்பனை செய்து வந்தோம். எங்கள் கம்பெனியின் CDல் மாடர்ன் சினிமா என்ற பெயரில் முத்திரை இருக்கும். எங்கள் கம்பெனியில் மதுரையை சேர்ந்த ராமநாதன் என்பவர் கணக்கராகவும், மதுரையை சேர்ந்த முருகன்

என்பவர் வெளிவேலை செய்பவராகவும், லதா மற்றும் சரவணன் ஆகியோர் விற்பனை பிரதிநிதிகளாக பணியாற்றி வந்தார்கள். நாங்கள் சட்டத்திற்குட்பட்டு வியாபாரங்கள் செய்து வந்தோம். எங்கள் கடையை முருகன் என்பவர் காலை 09.00 மணிக்கு திறப்பார். மற்ற ஊழியர்கள் 10.00 மணிக்கு வருவார்கள். நாட்டுப்புற பாடல்கள் விற்பனை செய்வதில் 1996-97ம் ஆண்டுகளில் எங்கள் கம்பெனி தமிழ்நாடு முழுவதும் மிகவும் பிரபலமான பிறகு சென்னையிலும் சென்று விற்பனை செய்து வந்தோம். அப்போது சென்னை சிந்தாதிரிபேட்டையில் உள்ள செய்யது இப்ராஹிம் அவர்களது மகன் காஜா மைதீன் எங்களிடம் CD கேட்க அவருக்கு விற்பனை செய்து வந்தோம். இரண்டு முறை சரியாக பணம் கொடுத்தவர் அதன் பின் ரூ.5 இலட்சம் வரை பாக்கி வைத்துவிட்டார். பணம் கேட்ட போது என்னை அடித்தார். கடைக்குவெளியே அடியாட்களை வைத்து கொலை மிரட்டல் விட்டார். அதனால் அவரிடம் நாங்கள் கேசட் விற்பனை செய்வதை நிறுத்திவிட்டோம். கேசர் சப்ளை செய்வதை நிறுத்தியதால் அவர் ஆட்களை கொண்டு கொலைமிரட்டல் விடுத்ததால் எங்கள் கேசட்டுகளை பாதி விலைக்கு அவரிடம் விற்பனை செய்தோம். 2000 ஆண்டுகளில் எங்களிடம் உரிமை இருந்த சினிமா படங்களை மாடர்ன் சினிமா என்ற பெயரில் CDக்களாக வெளியிட்டோம்.

**(கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**